செய்தி வெளியீடு : 19 நாள் :11.04.2018

***தேனி மாவட்டம்***
***களிமண், வண்டல், சவுடு மற்றும் கிராவல் எடுக்க அனுமதி வழங்கிட***
***வட்டாட்சியர் அலுவலகங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

*****

தேனி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரகவளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 412 கண்மாய், குளம், கால்வாய் போன்ற நீர்நிலைகளில் படிந்துள்ள களிமண், மண், வண்டல் மற்றும் கிராவல் போன்றவைகளை விவசாயிகள் தங்களது நிலத்தை மேம்படுத்தும் பயன்பாட்டிற்காகவும், மண்பாண்டத் தொழிலாளர்கள் மண்பாண்டம் செய்வதற்காகவும், தனிநபர்கள் வீட்டு பயன்பாட்டிற்காகவும் எடுத்துக் கொள்வதற்கு வட்டாட்சியர்களால் மனுக்கள் பெறப்பட்டு உரிய நிபந்தனைகளுடன் மண் எடுக்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் விரைந்து பயன்பெறும் பொருட்டு வரும் **13.04.2018 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் இதற்கென சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, ஊரகவளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். எனவே இம்முகாமிற்கு வருகை தந்து வண்டல் மண் எடுப்பதற்கு மனுச் செய்து உரிய அனுமதி பெற்று விவசாயிகள் / பொதுமக்கள் பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**